**செய்தி வெளியீடு எண்: 103** **நாள்: 12.02.2018**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று சட்டப்பேரவையில் (12.2.2018) ஆற்றிய உரை</u>

அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்திய அரசியல் வரலாற்றின்
ஈடு இணையற்ற சகாப்தம் !
உலகமே தமிழ்நாட்டை
உற்றுநோக்க வைத்த சரித்திரம்!
இளகும் உள்ளமும்,
இரும்பு உறுதியும் கொண்ட தங்கத் தாரகை !
தென்னகத்தின் திலகம் !
முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராய்
கோலோச்சிய கொள்கைக் குன்று !
பாரதி கண்ட புதுமைப் பெண் !
பாரதம் கண்ட புரட்சி வேள்வி
அரசியல்வாதிகளின் நம்பிக்கை நட்சத்திரம் !
கனிவும், கண்டிப்பும் ஒருங்கே பெற்ற ஆளுமை !

வீரத்தில் ஜான்சி ராணியாய்,
அன்பில் அன்னை தெரசாவாய்,
தொண்டரைக் காப்பதில் வீரமங்கை வேலுநாச்சியாராய்,
கழகத்தைக் காப்பதில் மங்கையர்கரசியாய்,

தமிழகத்தையும், தமிழக மக்களையும் காப்பதில்
காவல் தெய்வமாய்,

மறைந்தும் மறையாத மாணிக்கமாய்
அனைவரது உள்ளங்களிலும் வீற்றிருக்கும் வீரத்தாய்,

ஆறு முறை தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்று,
அனைவரின் அன்பையும், பாசத்தையும் பெற்ற
ஆருயிர்த் தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி
அம்மா அவர்களை மீண்டும் வணங்குகிறேன்.

வரலாற்று சிறப்பு மிக்க இந்த சட்டமன்றப் பேரவையில்,
வரலாறு படைத்த மாண்புமிகு அம்மா அவர்களின்
திருஉருவப்படத்தை **திறந்து வைத்த மாண்புமிகு**
**சட்டப் பேரவைத்தலைவர்** அவர்களே
**இந்நிகழ்ச்சிக்கு முன்னிலை வகிக்கும்**
**மாண்புமிகு துணை முதல்வர்** அவர்களே,

**சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டுள்ள**
**மாண்புமிகு நாடாளுமன்ற துணை சபாநாயகர்** அவர்களே,

இந்நிகழ்ச்சிக்கு **வரவற்புரை வழங்கிய**
**மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர்** அவர்களே,

**நன்றியுரை வழங்க இருக்கும்**
**மாண்புமிகு கொறடா** அவர்களே,

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட
தலைமைச் செயலாளர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,
நாடாளுமன்ற உறுப்பினர்களே,
சட்டமன்ற உறுப்பினர்களே

சட்டப்பேரவைச் செயலாளர் அவர்களே,
அரசு உயர் அதிகாரிகளே,
முன்னாள் அமைச்சர்கள் மற்றும்
வருகை தந்துள்ள முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
வருகை தந்துள்ள சான்றோர் பெருமக்களே,
வருகை தந்துள்ள பத்திரிகை நண்பர்களே,
உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தை
தெரிவித்துக்கொள்கிறேன்.

வரலாறு படைத்த சாதனைத்தலைவியின்
திரு உருவப்படத்தை திறந்து வைக்கும்
இந்த விழாவில் நான் பங்கேற்பதை
**என் வாழ்நாள் பாக்கியமாகக் கருதுகிறேன்.**

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும்
இவ்வரசு பதவியேற்று, ஓராண்டை வெற்றிகரகமாக
நிறைவு செய்யும் இவ்வேளையில்,
இந்த விழா நடப்பது, மாண்புமிகு அம்மா அவர்களே
நேரில் வந்து ஆசி வழங்குவதைப் போல் உணர்கிறேன்.

இந்த உயிரோட்டமுள்ள ஓவியம்,
மாண்புமிகு அம்மா அவர்களின் கம்பீரம்,
கண்ணியம், ஆளுமை, தாய்மை, மாட்சிமை,
பெருந்தன்மை ஆகிய குணங்களை ஒருங்கே
தத்ரூபமாக பிரதிபலிக்கின்றது.

**இந்த உயிரோட்டமுள்ள திரு உருவ ஓவியத்தை**
**தீட்டிய ஓவியரை நான் மனதார பாராட்டுகிறேன்.**

ஒருவர் தான் வாழ்ந்து கொண்டிருக்கும்போதும் சரி,
வாழ்ந்து மறைந்த பிறகும் சரி,
அனைவரது உள்ளங்களிலும்
நீங்காப் புகழைப் பெற்றிருக்க வேண்டுமெனில்,
அதற்குத் தேவை தன்னலமின்மை.
**இந்தத் தன்னலமின்மைக்கு சொந்தக்காரர்**
**மாண்புமிகு அம்மா அவர்கள்.**

**வரலாறு என்பது,**
**வந்து போனவர்களின் தொகுப்பு அல்ல;**
**தந்து போனவர்களின் தொகுப்பு என்பார்கள்.**
ஆம்! நலத் திட்டங்களை,
வளர்ச்சித் திட்டங்களை,
தொலைநோக்குத் திட்டங்களை,
மாநிலத்தின் உரிமைகளை பெற்றுத்
தந்து போனவர்களின் தொகுப்பு.

**வரலாறு படிப்பது முக்கியமல்ல;**
**வரலாறு படைக்க வேண்டும்.**
பிறர் தடம் பார்த்து நடப்பது முக்கியமல்ல;
நாமும் தடம் பதிக்க வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் இலக்கணமாய் வாழ்ந்து காட்டி,
இந்திய வரலாற்றின் கலைத் துறை பக்கங்களிலும்,
அரசியல் பக்கங்களிலும், தென்னகத்திலிருந்து
குறிப்பிடத்தக்க இடம் பிடித்த கலையரசியாகவும்
**வரலாறு படைத்த சாதனைத் தலைவி**
**மாண்புமிகு அம்மா அவர்கள்**

மண்ணை விட்டு மறைந்து விண்ணுக்குச் சென்றாலும்,
நம்முடைய மனங்களில், தமிழ்நாட்டு மக்களின் மனங்களில்
நிரந்தரமாக வீற்றிருக்கும் தங்க நிகர்த்தலைவி,

**பூமி உள்ளவரை, மாண்புமிகு அம்மா அவர்களின்**
**புகழ் நிலைத்து நிற்கும் என்பதில்**
**எள்ளளவும் சந்தேகம் இல்லை.**

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
ஒரு நேர்காணலில் பேசியபோது,
**'என்னை திரைப்படத் துறையிலும்,**
**அரசியல் களத்திலும்**
**முதல்வராக்கியது என் தமிழ் மக்கள் தான்'**
என்று நன்றிப் பெருக்கோடு கூறினார்கள்.
**அந்தக் கூற்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா**
**அவர்களுக்கும் முற்றிலும் பொருந்தும்.**

தமிழ் மக்களால், மாண்புமிகு அம்மா அவர்களும்,
மாண்புமிகு அம்மா அவர்களால்,
தமிழ் மக்களும் வளர்ந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
அரசியல் வளர்ச்சி என்பது அக்னியில் இருந்து
**மீண்ட பீனிக்ஸ் பறவையை போன்றதாகும்.**

அஇஅதிமுக–வில் இணைந்து
பின் கொள்கை பரப்புச் செயலாளராகவும்,
பிறகு மாநிலங்களவை உறுப்பினராகவும்
அரசியலில் திடமாக தடம் பதித்து வளர்ந்தார்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்களின் மறைவிற்குப் பின்னர்,
அஇஅதிமுக–வின் தலைமைப் பொறுப்பினை ஏற்று,
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்கள் கழகத்தின் பொதுச் செயலாளர் ஆனார்கள்.

அதன் பின்னர் பல சோதனைகளையும்,
வேதனைகளையும் வெற்றிகரமாக கடந்து,
**1991 முதல் 6 முறை தமிழ்நாட்டின்**
**முதலமைச்சராக பொறுப்பேற்று**
**மாண்புமிகு அம்மா அவர்களின் திரு உருவப் படத்திற்கு**
**கீழே எழுதப்பட்டுள்ள, மாண்புமிகு அம்மா**
**அவர்களின் தாரக மந்திரமான,**
**“அமைதி, வளம், வளர்ச்சி” என்ற பாதையில்,**
**தமிழ்நாட்டை திறம்பட வழிநடத்தியவர்**
**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.**

தனக்கென்று ஒரு தனி வாழ்க்கையை
அமைத்துக் கொள்ளாமல்,
தமிழ்நாட்டின் நலனை, தன் நலன் என்று கருதி,
அயராது உழைத்த மாண்புமிகு புரட்சித்தலைவி
அம்மா அவர்கள், தனது ஆட்சிக் காலங்களில்
பல்வேறு சாதனைகளைப் புரிந்தார்கள்.

1991ஆம் ஆண்டு நடைபெற்ற
சட்டமன்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று,
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின்
ஒரே அரசியல் வாரிசாக மாண்புமிகு அம்மா
அவர்கள் உருவெடுத்தார்கள்.

அதே போல 2001, 2011 மற்றும் 2016 ஆம்
ஆண்டுகளில் நடைபெற்ற
சட்டமன்ற பொதுத் தேர்தல்களில்
அஇஅதிமுக–வை வெற்றி பெறச் செய்து
சாதனை படைத்தவர் மாண்புமிகு
புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி
அம்மா அவர்கள் **2014**ஆம் ஆண்டு நடைபெற்ற
நாடாளுமன்ற பொதுத் தேர்தலில்
தமிழ்நாட்டின் **39** தொகுதிகளில்
**37**ல் வெற்றி பெற்று, இந்திய நாடாளுமன்றத்தில்
**3வது பெரிய கட்சியாக அஇஅதிமுக—வை**
**அமர வைத்து சரித்திரம் படைத்தவர்**
**மாண்புமிகு அம்மா அவர்கள்.**

**"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் – மக்கட்கு**
**இறை என்று வைக்கப்படும்"**
என்ற வள்ளுவனின் வாக்கிற்கேற்ப,

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,
தன் பொற்கால ஆட்சியில் ஏழைகளுக்காக
எண்ணற்ற உன்னதமான முன்னோடித் திட்டங்களை
செயல்படுத்தியதன் மூலம் மக்கள் மனதில்
தெய்வமாகவே இன்றும் வாழ்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்,
மாண்புமிகு அம்மா அவர்களை ராஜ்யசபா
உறுப்பினராகவும், ராஜ்யசபா அஇஅதிமுக—வின்
துணைத் தலைவராகவும் ஆக்கினார்.
பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு ராஜ்யசபாவில்
ஒதுக்கப்பட்ட அதே இருக்கை தான் மாண்புமிகு
அம்மா அவர்களுக்கும் ஒதுக்கப்பட்டது.
அப்போது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா
அவர்கள் ஆற்றிய உரை இந்திய அரசியல்வாதிகளையும்
உற்று நோக்க வைத்தது.

**"திட்டத்திற்காக அல்ல மக்கள்,**
**மக்களுக்காகவே திட்டங்கள்"** என்று கூறியவர்
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

**"நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வையும்,**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்",**
என்ற பாரதியின் பாடல் வரிகளுக்கு

உயிர் கொடுக்கும் வகையிலும்,
பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும்,
அவர்களுக்கு எதிரான வன்கொடுமைகளை
ஒழித்திடும் வகையில் உலகத்திற்கே முன்னோடியாக
**“அனைத்து மகளிர் காவல் நிலையங்களை”**
மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தினார்கள்.

அது மட்டுமன்றி,
**“தமிழ்நாடு பெண்கள் இன்னல் தடுப்புச் சட்டத்தின்”**
கீழ் குற்றவாளிகளுக்கான தண்டனைகளை
கடுமையாக்கி சட்டத்தில் திருத்தங்களை
கொண்டு வந்தார். மாண்புமிகு **எம்.ஜி.,ஆர்.,**
**அம்மா வழியில் செயல்படும் இவ்வரசால்,**
**தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக திகழ்கிறது.**

அண்ணல் அம்பேத்கர் அவர்களைப் போல,
பழங்குடியின மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள்,
மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள்,
சிறுபான்மையினர் உட்பட அனைத்துத் தரப்பு
மக்களுக்காகவும் தன் வாழ்நாளையே
அர்ப்பணித்த அபூர்வத் தலைவி
மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு
இறுதி மரியாதை செய்ய வந்த மாண்புமிகு பாரதப் பிரதமர்
**திரு. நரேந்திர மோடி** அவர்களும்,

**“ மாண்புமிகு அம்மா அவர்களின் மறைவு**
**இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு மிகப்பெரிய**
**வெற்றிடத்தை ஏற்படுத்தி விட்டது;**
**மாண்புமிகு அம்மா அவர்களின் மக்களுடனான உறவு,**
**ஏழை எளிய மக்கள், பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்கள்**
**மீதான அவரது அக்கறை பிறருக்கு என்றென்றும்**
**ஊக்கமாகத் திகழும்”** என்று பாராட்டினார்.

சட்டப் போராட்டத்தின் மூலம், தனது தொடர் முயற்சியால்,
காவிரி நடுவர் மன்ற இறுதி ஆணையை

மத்திய அரசிதழில் வெளியிட செய்தார்.
**இது காவிரியை மீட்ட காவியத் தாயின்**
**ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.**

அதே போல **முல்லைப் பெரியாறு அணை** பிரச்சனையில்
உச்ச நீதிமன்றம் வரை சென்று போராடி
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,
அணையின் நீர் தேக்கும் அளவினை
**142 அடியாக உயர்த்த** ஆணை பெற்றார்.

நிலத்தடி நீர் உயரும் வகையில்
**மழைநீர் சேகரிப்பு திட்டத்தை** அறிமுகப்படுத்தி,
அனைத்து வீடு மற்றும் கட்டடங்களும்
**கட்டாயம் மழைநீர் சேகரிப்பு அமைப்பை உருவாக்க**
**வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன்**
**ஆணை வெளியிட்டார்கள்.**
வறட்சிக் காலங்களிலும், நிலத்தடி நீர் மட்டம்
வெகுவாக உயர்ந்ததை உலகம் பாராட்டியது.

**“என்னை நம்பி வாக்களித்தவர்களுக்கு,**
**நான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே**
**என்னுடைய புனிதக் கடமையாகக் கருதுகிறேன்.**
**ஏழை, எளிய மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற**
**நான் ஒரு போதும் தவறியதில்லை”** என்ற
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,

தன் சொல்லை செயலாக்கும் வண்ணம்,
குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒவ்வொரு மாதமும்
**விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தினை**
நடைமுறைப்படுத்தினார்கள்.

**"தேசியமும், தெய்வீகமும் தனது இரு கண்கள்"**
என்று முழங்கியவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்.
இந்த பொன்மொழியை தனது வாழ்நாள் முழுவதும்
கடைபிடித்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.
மாண்புமிகு அம்மா அவர்களின் தெய்வீகப் பணி

அனைவரும் அறிந்த ஒன்று.

**திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம்,**
**ரமலான் மாதத்தில் பள்ளிவாசல்களுக்கு**
**இலவச அரிசி வழங்கும் திட்டம்,**
**அனைத்து மதத்தினரும் தங்கள் புனிதத் தலங்களுக்குச்**
**செல்ல மானியம் வழங்கும் திட்டம்**
**என மாண்புமிகு அம்மா அவர்களின் தெய்வீகப் பணிகளை** அடுக்கிக் கொண்டே போகலாம்.

தேசப் பற்று என்பது இளம் வயதிலிருந்தே
மாண்புமிகு அம்மா அவர்களின் ரத்தத்தில் ஊறிய ஒன்று.
1965 ஆம் ஆண்டு பாகிஸ்தான் போர்
நடைபெற்ற போது, அப்போதைய பாரதப் பிரதமர்
லால்பகதூர் சாஸ்திரி அவர்களைச் சந்தித்து,
தன்னுடைய நகைகளை நாட்டிற்காக வழங்கிய
புனிதத் தாய் மாண்புமிகு அம்மா அவர்கள்.

இந்தத் தருணத்தில் தமிழ்நாடு சட்டமன்றப்
பேரவையில் நடைபெற்ற ஒரு விவாதத்தினை
இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு
தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினர்,
பின்னர் அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டார்.

இந்த உறுப்பினர், 2005 ஆம் ஆண்டு
நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு மீதான
விவாதத்தில் கலந்து கொண்டு பேசியபோது,
மத்திய அரசு நிதி தராததை சுட்டிக்காட்டி,
**மத்திய அரசை தாக்கிப் பேசியதோடு,**
**தேச ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்கும்**
**வகையில் ஒரு வார்த்தையை பயன்படுத்தினார்.**

உடனே, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள்

**"இந்தப் பேச்சை பதியவைக்கக்கூடாது"** என்று
வலியுறுத்தினர்.

இதற்கு பதில் அளித்த மாண்புமிகு அம்மா அவர்கள்,
**"அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில்
பிரிவினைக் கொள்கையில் எங்களுக்கு
நம்பிக்கை இல்லை. நாட்டின் ஒற்றுமையை
என்றைக்கும் காப்போம்"** என்று சூளுரைத்தார்.
இதோடு நின்றுவிடவில்லை.

**"மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை
அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்"
என்றும் கேட்டுக் கொண்டார்.**

இதை நான் ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால்,
2005–ல், மத்தியில் காங்கிரஸ் ஆட்சி
நடைபெற்றுக் கொண்டிருந்தது.
அதில் தி.மு.க. அங்கம் வகித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**இருந்தாலும், தேச ஒற்றுமை, தேசப் பற்று
என்று வந்தவுடன், அதற்கு ஆதரவாக குரல்
எழுப்பியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.**

அனைவருக்கும் விலையில்லா அரிசி வழங்கும் திட்டம்;
ஏழைகள் பசி போக்க அம்மா உணவகங்கள்;
பசுமை பண்ணை நுகர்வோர் கடைகள்;
அம்மா குடிநீர், அம்மா மருந்தகங்கள்;
முதியோர், விதவை, ஓய்வூதியம்;
நெசவாளிகள் மற்றும் வீடுகளுக்கு
குறிப்பிட்ட அளவு விலையில்லா மின்சாரம்,
ஏழைத் திருமணப் பெண்களுக்கு 50,000 ரூபாய் வரை
உதவி மற்றும் எட்டு கிராம் தாலிக்கு தங்கம்;

விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும்
விலையில்லா மின்விசிறி வழங்கும் திட்டம்,
கிராமப்புற ஏழை மக்களுக்கு கறவைப் பசுக்கள் மற்றும்

செம்மறியாடுகள் வழங்கும் திட்டம்,
முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டம்,
உழவர் பாதுகாப்புத் திட்டம்

என பல்வேறு திட்டங்களை தமிழ்நாட்டு மக்களுக்காக
ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களின் நலன்களுக்காக
அல்லும் பகலும் அயராது பாடுபட்டவர் மாண்புமிகு
புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

கல்வித்துறையில் மாணவ மாணவியருக்கு
14 வகையான நலதிட்ட பொருட்கள்,
விலையில்லா மடிக்கணினி, கட்டணமில்லா பேருந்து வசதி,
என பல்வேறு திட்டங்கள், பள்ளிகளை தரம் உயர்த்தல்
உயர்கல்வியில் குறைந்த கட்டணத்தில் மாணவர்கள்
பயில்வதற்கு ஏதுவாக, பல
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்,
பொறியியல் கல்லூரிகள் மற்றும் பால்டெக்னி கல்லூரிகள்
திறக்கப்பட்டன.

**மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் ஒரு சிறுதுளி
கூட மாறாமல் அனைத்து நலத்திட்டங்களையும்
இவ்வரசு செயல்படுத்தி வருகிறது என்பதை
இங்கு பெருமையாக குறிப்பிட விரும்புகிறேன்.**

**ஒரு சிறு கதை மூலம் தெய்வத்தின் அருள் எவ்வளவு
முக்கியமானது என தெரிவிக்க விரும்புகிறேன்.**

**காந்தபுர நகரம்** என்றொரு நகரம்.
**"அரசர் இருப்பதால் எல்லாம் சுபிட்சமாக இருக்கிறது.
அவர் இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது"**
என்று சொல்லும் **ராஜபக்தன் ஒருவன்** இருந்தான்.

அதே நேரத்தில், **"எல்லாம் ஆண்டவர் அருள்.
அவன் இல்லாவிட்டால் எதுவும் நடக்காது."**
என்று சொல்லும் **இறை பக்தனும்** இருந்தான்.

**ராஜவின் ஆட்சியா, ஆண்டவரின் ஆட்சியா**

என்பதில் இருவரும் வாக்குவாதம் செய்து கொள்வார்கள்.

மாறுவேடத்தில் வந்த ராஜா
இவர்கள் இருவரையும் கவனித்தார்.

பின்னர், பூசணிக்காய் ஒன்றை
எடுத்துக் குடைந்தார் ராஜா.
அதற்குள் சில தங்க நாணயங்களையும்,
வைரங்களையும் போட்டார்.
அதனைக் குடைந்து எடுத்த இடம் தெரியாமல்
மூடியும் விட்டார்.

ராஜ பக்தனைக் கூப்பிட்டு
அதனை பரிசாகக் கொடுத்தார்.
இதனைப் பெற்றுக் கொண்ட ராஜ பக்தன்,
சிறிய பரிசை ராஜா கொடுத்திருக்கிறாரே
என்று நினைத்துக் கொண்டே
அதனைக் கடையில் விற்றுவிட்டான்.

அதே வீதி வழியாகக் ஆண்டவனின் பக்தன் சென்றான்.
பூசணிக்காயை பார்த்தான். கடையிலிருந்து அதனை
2 ரூபாய் விலை கொடுத்து வாங்கி, சிவனடியார்க்கு
அன்னதானம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில்
பூசணிக்காயை நறுக்கச் சொன்னான்.

அவ்வாறு நறுக்கும்போது,
அந்த பூசணிக்காய்க்கு உள்ளே 20 தங்க நாணயங்கள்,
சில வைரக் கற்கள் இருந்தன.
ஆச்சர்யம் தாங்கவில்லை ஆண்டவ பக்தனுக்கு.

ஆண்டவணின் பக்தன் இது யாருடைய பொருள்
என்று தெரியாததால் ராஜாவிடம் முறையிடச் சென்றான்.

அந்த நேரத்தில், ராஜாவும்,
அந்த ராஜ பக்தனை அழைத்து வர ஆள் அனுப்பினார்.
**"உனக்குத் தங்கப் பூசணிக்காய் கொடுத்தேனே!
என்ன செய்தாய் ?"** என்று கேட்டார்.

**"சாதாரண பூசணிக்காய்!**
**அதை ஒரு ரூபாய்க்கு விற்று விட்டேன்."**
என்றான் ராஜபக்தன்.
ராஜா வாயை மூடிக் கொண்டார்.

**"ராஜாவே! நேற்று நான் கடைவீதிக்குப் போனேன்.**
**அங்கே ஒரு பூசணிக்காய் வாங்கினேன்.**
**அதில் 20 தங்க நாணயங்களும்,**
**சில வைரக் கற்களும் இருந்தன.**
**அதுபற்றி தங்களிடம் முறையிடவே**
**அவற்றோடு வந்து இருக்கிறேன்."** என்று கூறி
அதனை ராஜா முன்பு வைத்தான் ஆண்டவ பக்தன்.

**"இதை நீயே வைத்துக்கொள்.**
**ஆண்டவர் அருள் மிகப் பெரிது.**
என்று ராஜா கூறி
ஆண்டவ பக்தனை  ஆச்சரியப்பட வைத்தார்.

ராஜ பக்தனுக்கோ ஒன்றும் புரியவில்லை.
**"இந்த நாட்டு மக்களை நான் அரசாட்சி**
**செய்யவில்லை.  ஆண்டவன் ஆட்சி செய்கிறான்."**
என்று ராஜா சொல்லிவிட்டு,
இருவருக்கும் உணவு படைத்து அனுப்பினான்.

**ஆம்! இந்த நாட்டை, தமிழ்நாட்டை,**
**மாண்புமிகு அம்மா என்கின்ற தெய்வம்**
**எங்களை வழிநடத்தி ஆட்சி செய்கின்றது.**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
ஒரு உரையில், உருக்கமாக கூறியதை இங்கே
நினைவு கூருகிறேன்.

**“உங்களுக்கு வரும் துன்பங்களை எல்லாம்**
**நான் சுமக்கிறேன்.  எனக்கென்று**
**தனி வாழ்க்கை கிடையாது.**
**எனக்கென்று உறவினர் கிடையாது.**
**எனக்கு சுயநலம் அறவே கிடையாது.**

**எனக்கு எல்லாமும் நீங்கள் தான்.**
**என் இல்லமும், உள்ளமும் தமிழகம் தான்"**
என்று கூறினார்.

இப்படிப்பட்ட உன்னதமான தலைவரின்
பெருமை மற்றும் சாதனை மிக்க சரித்திரத்தை
வருங்கால சந்ததியினர் தெரிந்து கொள்வதற்காக
**அவர் வாழ்ந்த வேதா நிலையத்தை அவரது**
**நினைவு இல்லமாக மாற்றவும்,**

**வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும்**
**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா**
**அவர்களுக்கு பிரமாண்டமான**
**நினைவு மண்டபமும் அமைக்க**
**இவ்வரசு அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.**

**"இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும்**
**அஇஅதிமுக மக்களுக்காகவே இயங்கும்"**
**என்று இதே அவையில் மாண்புமிகு அம்மா**
**அவர்கள் கூறியதை இங்கே நான் நினைவு கூருகிறேன்.**

**சாதனை என்றால் அம்மா!**
**சரித்திரம் என்றால் அம்மா!**
**சகாப்தம் என்றால் அம்மா!**
**என்பதை இந்த மண்ணுக்கு உணர்த்தி**
**எங்களையெல்லாம் விட்டு விண்ணுக்குச் சென்ற**
**மனித சக்தி கடந்த மகா சக்தி,**

**ஒன்றரை கோடி தொண்டர்களின் உயிர் சக்தி,**
**உலகத் தமிழர்களின் இதய சக்தி,**
**அம்மா என்னும் அற்புத சக்தியின்**
**திருவடியினை மீண்டும் ஒருமுறை பணிந்து வணங்கி,**

இந்த விழா சீரோடும் சிறப்போடும்

நடைபெற காரணமாக இருந்த மாண்புமிகு
சட்டப்பேரவைத் தலைவர் அவர்களுக்கு
மீண்டும் ஒரு முறை  எனது மனமார்ந்த
நன்றியினை தெரிவித்து,

அண்ணா நாமம் வாழ்க
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நாமம் வாழ்க
அம்மாவின் புகழ் ஓங்குக
என்று கூறி விடைபெறுகிறேன்.

**நன்றி, வணக்கம்.**

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**